# SUNDAY SCHOOL SYLLABUS

# TAMIL

# STANDARD 1

# 1997

## பொருளடக்கம்


1. சிருஷ்டிப்பின் வரலாறு
2. ஆதாமும் ஏவாளும்
3. ஆதாமும் ஏவாளும் ஏதேனை இழத்தல்
4. காயீனும் ஆபேலும்
5. ஏனோக்கு
6. நோவாவும் பேழையும் (பகுதி I)
7. நோவாவும் பேழையும் (பகுதி II)
8. பாபேல் கோபுரம்
9. ஆபிரகாமும் லோத்தும்
10. ஆபிரகாம் லோத்தை விடுதலையாக்கினது
11. யோவான்ஸ்நானனின் பிறப்பு
12. இயேசுவின் பிறப்பு
13. பலாகனாகிய இயேசு தேவாலயத்திற்குக் கொண்டுபோகப்பட்டது
14. சாஸ்திரிகள் இயேசுவைத் தரிசித்தது
15. பாலகனாகிய இயேசு எகிப்துக்குக் கொண்டுபோகப்பட்டது
16. எருசலேமில் இளைஞரான இயேசு
17. இயேசு ஞானஸ்நானம் எடுத்தது (யோவான்ஸ்நானனின் ஊழியம்)
18. இயேசு வனாந்தரத்தில் சோதிக்கப்பட்டது
19. கானாவூர் கலியாணம்
20. இயேசு தேவாலயத்தைச் சுத்திகரித்தது

## பாடம் 1

## சிருஷ்டிப்பின் வரலாறு

**ஆதி. அதி. 1**

**பொருளடக்கம்:**

சிருஷ்டிப்பின் வரிசை:

முதலாம் நாள் - வெளிச்சம் [பகல், இரவு] (ஆதி. 1:3-5).

இரண்டாம் நாள் - ஆகாய விரிவு [ஜலத்தைப் பிரித்தல்] (ஆதி. 1:6-8).

மூன்றாம் நாள் - புல், விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகள், கனிதரும் விருட்சங்கள் (ஆதி. 1:11-13).

நான்காம் நாள் - சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் (ஆதி. 1:16-19).

ஐந்தாம் நாள் - நீந்தும் ஜீவஜந்துக்கள், பறவைகள், மகாமச்சங்கள் (ஆதி. 1:20-23).

ஆறாம் நாள் - ஜீவஜந்துக்களாகிய காட்டு மிருகங்கள், நாட்டு மிருகங்கள், ஊரும் பிராணிகள், மனுஷன் (ஆதி. 1:25, 27, 31).

**போதனை:**

மனிதனுக்குத் தேவையான யாவற்றையும் தேவன் சிருஷ்டித்தார். இது, தேவன் நமக்காக எவ்வளவாய்க் கவலைப்படுகிறார் என்பதைக் காண்பிக்கிறது.

**மனப்பாடம்:** ஆதியாகமம் 1:1

**ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்.**

-------------------

## பாடம் 2

## ஆதாமும் ஏவாளும்

**ஆதி. அதி. 2**

**பொருளடக்கம்:**

1. தேவன் மனிதனை பூமியின் மண்ணினால் உருவாக்கினார். அவர் ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார்; அவன் ஜீவாத்துமாவானான் (ஆதி. 2:7). அவன் ஆதாம் என அழைக்கப்பட்டான்.

2. அந்த மனிதன் வசிக்கும்படியாக அவனுக்காகத் தேவன் ஏதேனில் ஒரு தோட்டத்தை உண்டாக்கினார் (ஆதி. 2:8).

3. ஆதாம் சகல ஜீவஜந்துக்களுக்கும் பேரிட்டான் (ஆதி. 2:19, 20).

4. ஆதாம் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்று கர்த்தர் கண்டு, அவனுக்கு ஒரு ஏற்ற துணையை உண்டாக்க நினைத்தார். கர்த்தர் அவனுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணி, அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து அதை மனுஷியாக உருவாக்கினார். ஆதாம் அவளுக்கு ஏவாள் எனப் பேரிட்டான் (ஆதி. 2:18, 21, 22, 3:20).

5. ஆதாம், ஏவாள் ஆகிய இரண்டு பேரும் ஏதேனில் இருந்தார்கள். இவர்களே நம்முடைய முற்பிதாக்கள்.

**போதனை:**

தேவன் மனுஷனைத் தம்முடைய சாயலாக உண்டாக்கினார். இது மனுஷன் எவ்வளவு மேன்மையான சிருஷ்டி என்பதை வெளிப்படுத்துகிறது.

**மனப்பாடம்:** ஆதியாகமம் 1:27

**தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்.**

---------------------

## பாடம் 3

## ஆதாமும் ஏவாளும் ஏதேனை இழத்தல்

### ஆதி. அதி. 3

**பொருளடக்கம்:**

1. தேவன் மனுஷனைத் தமது ரூபத்தின்படியேயும், தமது சாயலின்படியேயும் சிருஷ்டித்தார். அவர், அவனுக்கு ஏற்ற துணையாக ஏவாளைக் கொடுத்து, அவர்களை ஏதேன் என்னும் தோட்டத்தில் வைத்தார் (ஆதி. 1:26, 27; 2:8, 21-23).

2. அந்தத் தோட்டம் அழகான விருட்சங்களால் நிறைந்திருந்தது. எல்லா விருட்சங்களிலிருந்தும் விருப்பம் போலப் புசிக்கலாம் என்று தேவன் அவர்களுக்குச் சொன்னார். ஆனால் தோட்டத்தின் நடுவிலே உள்ள நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம் என்று அவர் கட்டளையிட்டார் (ஆதி. 2:16, 17).

3. அவர்கள் இரண்டு போரும் சந்தோஷமாக ஜீவித்து வந்தார்கள். அவர்கள் மகிமையினால் உடுத்துவிக்கப்பட்டிருந்தார்கள். அங்கே அவர்கள் தேவனைக் காண்பதற்கும் அவரோடு பேசுவதற்கும் சிலாக்கியமுள்ளவர்களாயிருந்தார்கள்.

4. சாத்தான் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கும்படியாக ஏவாளைச் சோதித்தான் (ஆதி. 3:4, 5).

5. ஏவாள் அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும் பார்வைக்கு இன்பமும் புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதைப் புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள். அவனும் புசித்தான் (ஆதி. 3:6).

6. அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது. அவர்களுக்கு வஸ்திரமாயிருந்த மகிமை அவர்களை விட்டு நீங்கி விட்டது. அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலைகளைத் தைத்து, தங்களுக்கு ஒரு உடுப்பை உண்டுபண்ணினார்கள் (ஆதி. 3:7).

7. பகலில் குளிர்ச்சியான வேளையில் தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டபோது, பயந்து, விருட்சங்களுக்குள்ளே ஒளிந்து கொண்டார்கள் (ஆதி. 3:8).

8. தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு, "புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ" என்றார். அதற்கு அவன், ஏவாள் அவ்விருட்சத்தின் கனியைத் தந்ததாகவும் தான் புசித்ததாகவும் பதிலளித்தான் (ஆதி. 3:11, 12).

9. தம்முடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாதபடியால், அவர்கள் இருவரையும் தேவன் தோட்டத்திலிருந்து துரத்திவிட்டார் (ஆதி. 3:23, 24).

**போதனை:**

கீழ்ப்படியாத பிள்ளைகளை தேவன் தண்டிக்கிறார். எனவே நாம் எல்லாவற்றிலும் எப்போதும் தேவனுக்குக் கீழ்ப்படிய கவனமாயிருக்க வேண்டும்.

**மனப்பாடம்:** யாக்கோபு 4:7

**பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பாழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்.**

---------------------

## பாடம் 4

## காயீனும் ஆபேலும்

### ஆதி. அதி. 4

**பொருளடக்கம்:**

1. ஆதாம், ஏவாளுக்கு இரண்டு குமாரர் இருந்தனர். மூத்தவன் பெயர் காயீன், இளையவன் பெயர் ஆபேல்.

2. காயீன் நிலத்தைப் பயிரிடுகிறவனாயிருந்தான்; ஆபேல் ஆடுகளை மேய்க்கிறவனாயிருந்தான் (ஆதி. 4:2).

3. ஒருநாள் காயீனும் ஆபேலும் கர்த்தருக்குக் காணிக்கைகளைக் கொண்டு வந்தார்கள். காயீன் நிலத்தைப் பயிரிடுகிறவனாயிருந்ததால், நிலத்தின் கனிகளைக் கொண்டு வந்தான். ஆபேல் ஆடுகளை மேய்க்கிறவனாயிருந்தபடியால் தன் மந்தையின் தலையீற்றுகளிலும் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டு வந்தான் (ஆதி. 4:3, 4). ஆனால் காயீனுடைய காணிக்கையைக் குறித்து அவன் நிலத்தின் விளைச்சலில் மிகச் சிறந்ததைக் கொண்டு வந்தான் என்று குறிப்பிடப்படவில்லை.

4. தேவன் ஆபேலுடைய காணிக்கையை அங்கீகரித்தார்; ஆனால், காயீனுடைய காணிக்கையை அங்கீகரிக்கவில்லை (ஆதி. 4:4, 5).

5. காயீன் தன் சகோதரனாகிய ஆபேலின் மேல் அதிகக் கோபமடைந்தான். ஒருநாள் அவர்கள் வயல்வெளியில் இருந்தபோது அவன் ஆபேலைக் கொலை செய்தான் (ஆதி. 4:5, 8).

6. தேவன் காயீனிடத்தில், ‘உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே’ என்று கேட்டபோது, அவன் கர்த்தருக்கு சரியான பதில் கொடுக்காமல், ‘என் சகோதரனுக்கு நான் காவலாளியோ’ என்று கூறினான் (ஆதி. 4:9).

7. கர்த்தர் காயீனைச் சபித்தார் (ஆதி. 4:11, 12).

8. காயீன் கர்த்தரிடம் கெஞ்சினபோது, அவனை ஒருவனும் கொலை செய்யாதபடி கர்த்தர் அவன்மேல் ஒரு அடையாளத்தைப் போட்டார் (ஆதி. 4:13-15).

**போதனை:**

தேவன் நம் இருதயத்தைப் பார்க்கிறார்; நம் செய்கைகளைக் கவனிக்கிறார். எரிச்சல், பொறாமை முதலிய தீய சுபாவங்களுடையவர்களைக் கர்த்தர் விரும்பமாட்டார். இப்படிப்பட்ட சுபாவங்கள் நம்மைக் கொடிய பாவிகளாக மாற்றிவிடும்.

**மனப்பாடம்:** II கொரிந்தியர் 9:7

**உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.**

-------------------------

## பாடம் 5

## ஏனோக்கு

**ஆதி. 5:21-24**

**பொருளடக்கம்:**

1. ஏனோக்கு என்பவன் தேவனுக்குப் பிரியமான மனுஷனாய் இருந்தான் (எபி. 11:5).

2. அவன் இரவும் பகலும் முந்நூறு வருஷம் தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தான். அவனுக்குக் குமாரரும் குமாரத்திகளும் இருந்தனர் (ஆதி. 5:22, 24).

3. தேவன் அவனை எடுத்துக்கொண்டார். அவன் மரணத்தைக் காணவில்லை (ஆதி. 5:24).

4. அவன் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னமே தேவனுக்குப் பிரியமானவனென்று சாட்சி பெற்றான் (எபி. 11:5).

**போதனை:**

ஏனோக்கைப் போல நாமும் தேவனோடு சஞ்சரிக்க விரும்புவோமாக.

**மனப்பாடம்:** ஆதியாகம் 5:24

**ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருக்கையில், காணப்படாமற்போனான்: தேவன் அவனை எடுத்துக்கொண்டார்.**

----------------------

## பாடம் 6

## நோவாவும் பேழையும் (பகுதி I)

**ஆதி. 6:5-7:16**

**பொருளடக்கம்:**

1. நோவா என்னும் பேருள்ள மனிதன் நீதிமானும் உத்தமனுமாயிருந்து தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தான் (ஆதி. 6:9).

2. எட்டுப் பேர் அடங்கிய அவனுடைய குடும்பம்- நோவா, அவனுடைய மனைவி, மூன்று குமாரர்கள், அவர்களுடைய மனைவிகள் (ஆதி. 6:10, 18).

3. அந்தக் காலத்திலே ஜனங்கள் துன்மார்க்கரும் தேவனுக்குப் பயப்படாதவர்களுமாயிருந்தனர். ஆனபடியால், தேவன் அவர்களை ஜலப்பிரளயத்தினால் அழிக்கத் தீர்மானித்தார் (ஆதி. 6:5, 7).

4. தேவன் நோவாவையும் அவன் குடும்பத்தையும் காப்பாற்ற விரும்பினார். அதற்காக ஒரு பேழையை உண்டு பண்ணும்படி தேவன் நோவாவுக்குக் கட்டளையிட்டார் (ஆதி. 6:14). நோவா, தேவன் கொடுத்த கட்டளையின்படியே செய்தான்.

5. இந்தப் பேழைக்கு மூன்று தட்டுகள் இருந்தன (ஆதி. 6:16). இந்தப் பேழையைக் கட்டி முடிக்க அநேக வருடங்கள் சென்றிருக்கக் கூடும்.

6. அந்தப் பேழையைப் பார்த்த யாவரும் இவ்வளவு பெரிய பேழை எதற்காக என்று கேட்டிருக்கக்கூடும். ஒரு பெரிய ஜலப்பிரளயம் வரப்போகிறது; அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவே இதைக் கட்டுகிறேனென்று நோவா கூறியிருக்கக் கூடும்.

7. பூமியின் மீதெங்கும் வித்தை உயிரோடே காக்கும் பொருட்டு, சகல பறவைகளிலும், மிருகங்களிலும், ஊரும்பிராணிகளிலும், வகை ஒன்றுக்கு ஒவ்வொரு ஜோடு பேழையில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று தேவன் நோவாவுக்குக் கட்டளையிட்டார் (ஆதி. 6:19, 20).

8. அந்தப்படியே நோவா செய்தான். நோவாவின் குடும்பத்தார் பேழைக்குள் பிரவேசித்தார்கள். (ஆதி. 7:7).

9. மழை பெய்ய ஆரம்பித்தது. தேவன் பேழையின் கதவை அடைத்தார் (ஆதி. 7:12, 16).

**போதனை:**

நீதிமான்களையும் உத்தமர்களையும் காக்கும்படி கர்த்தர் அறிந்திருக்கிறார்.

**மனப்பாடம்:** ரோமர் 1:17

**விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்.**

---------------------

## பாடம் 7

## நோவாவும் பேழையும் (பகுதி II)

**ஆதி. 7:17-8:20**

**பொருளடக்கம்:**

1. நாற்பது நாள் இரவும் பகலும் விடாமல் மழை பெய்து கொண்டிருந்தது (ஆதி. 7:12).

2. ஜலம் பெருகினபடியால் பூமியிலிருந்த பறவைகள், நாட்டு மிருகங்கள், காட்டு மிருகங்கள், ஊரும் பிராணிகள், மற்றும் ஜீவ ஜந்துக்கள் அனைத்தும் அழிந்து போயின. மனிதரும் மாண்டு போயினர் (ஆதி. 7:20-23).

3. ஆனால் நோவாவின் பேழை ஒரு சேதமும் இல்லாமல் ஜலத்தின் மீது மிதந்து கொண்டிருந்தது (ஆதி. 7:17). நோவாவின் குடும்பத்தையும் பேழையில் உள்ள ஜீவ ஜந்துக்களையும் கர்த்தர் ஒரு ஆபத்தும் வராமல் பாதுகாத்தார் (ஆதி. 7:23).

4. நூற்றைம்பது நாட்களுக்குப் பின்பு ஜலம் வற்றத் தொடங்கினது (ஆதி. 8:3).

5. பேழை அரராத் மலைகளின்மீது தங்கிற்று (ஆதி. 8:4).

6. பூமி காய்ந்தபோது நோவாவின் குடும்பமும், பேழையிலிருந்த சகல ஜீவஜந்துக்களும் பேழையிலிருந்து வெளியே வந்தன (ஆதி. 8:14, 18, 19).

7. தேவன் அவர்களை ஜலப்பிரளயத்திலிருந்து காப்பாற்றினபடியால் நோவா தேவனுக்குப் பலி செலுத்தினான் (ஆதி. 8:20).

**போதனை:**

நோவாவைப்போல் நாமும் தேவனுக்குப் பயந்து அவருக்குக் கீழ்ப்படிந்தால் தேவன் நம்மையும் சகல ஆபத்துகளிலிருந்தும் விடுவிப்பார்.

**மனப்பாடம்:** எபிரெயர் 11:6

**விசுவாசமில்லமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்.**

--------------------------

## பாடம் 8

## பாபேல் கோபுரம்

**ஆதி. 11:1-9**

**பொருளடக்கம்:**

1. நோவாவும் அவன் குடும்பமும் ஜலப்பிரளயத்தினால் அழிக்கப்படாமல் பேழையின் மூலம் இரட்சிக்கப்பட்டனர். அவர்கள் மூலம் பூமியில் ஜனங்கள் மறுபடியும் பெருகினார்கள் (ஆதி. 9:1, 19).

2. இந்த ஜனங்கள் பூமியின் மீதெங்கும் சிதறிப்போகாதபடிக்கு ஒரு நகரத்தையும், கோபுரத்தையும் கட்ட தீர்மானித்தனர் (ஆதி. 11:1-4).

3. ஜனங்கள் யாவரும் ஒரே பாஷையைப் பேசினார்கள். அவர்கள் செய்ய நினைத்தது தடைபட மாட்டாது என்றிருந்தனர் (ஆதி. 11:6).

4. மனுபுத்திரர் கட்டுகிற நகரத்தையும் கோபுரத்தையும் பார்க்கிறதற்குக் கர்த்தர் இறங்கினார் (ஆதி. 11:5).

5. அப்பொழுது ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறியாதபடிக்கு கர்த்தர் அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்கினார் (ஆதி. 11:7).

6. ஆகையால் அவர்கள் நகரத்தைக் கட்ட முடியாமற் போனது (ஆதி. 11:8).

7. கர்த்தர் அவர்களைப் பூமியின் மீதெங்கும் சிதறிப் போகப் பண்ணினார் (ஆதி. 11:8).

8. பூமியெங்கும் வழங்கின பாஷையைக் கர்த்தர் அவ்விடத்தில் தாறுமாறாக்கினபடியால் அதின் பெயர் பாபேல் எனப்பட்டது (ஆதி. 11:9).

**போதனை:**

மனிதனுடைய இருதயத்தின் நினைவுகளெல்லாம் செம்மையானவையாயிராதபோது கர்த்தர் அவைகளைத் தாறுமாறாக்குகிறார்.

**மனப்பாடம்:** சங்கீதம் 127:1

**கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா.**

---------------------

## பாடம் 9

## ஆபிரகாமும் லோத்தும்

### ஆதி. அதி. 13

**பொருளடக்கம்:**

1. ஆபிரகாம் தேவனால் அழைக்கப்பட்டான். லோத்து அவனோடுகூடப் போனான் (ஆதி. 12:1, 4).

2. அவர்களுடைய திரளான ஆஸ்திகளின் நிமித்தம் அவர்கள் ஒருமித்து வாசம்பண்ணக் கூடாமற் போயிற்று (ஆதி. 13:5, 6).

3. ஆபிரகாம், லோத்து இவர்களுடைய மந்தை மேய்ப்பருக்குள் வாக்குவாதம் உண்டானது (ஆதி. 13:7).

4. ஆபிரகாமின் ஆலோசனை (ஆதி. 13:8, 9).

5. லோத்து யோர்தானின் சமவெளியைத் தெரிந்தெடுத்தான் (ஆதி. 13:11).

6. ஆபிரகாம் கானானில் வாசம்பண்ணினான் (ஆதி. 13:12).

7. லோத்து ஆபிரகாமை விட்டுப் பிரிந்த பின் கர்த்தர் ஆபிரகாமோடு பேசி அவனுக்கு வாக்குத்தத்தம் கொடுத்தார் (ஆதி. 13:14-17).

**போதனை:**

கர்த்தரால் அழைக்கப்பட்ட நாம் அவருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து ஜீவிக்கும்போது, அவர் சகல தடைகளையும் நீக்கி நம்மை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாடம்:** பிலிப்பியர் 2:16

**எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்.**

---------------------------

## பாடம் 10

## ஆபிரகாம் லோத்தை விடுதலையாக்கினது

**ஆதி. 14:8-16**

**பொருளடக்கம்:**

1. ஆபிரகாமுடன் வசித்துவந்த லோத்து அவனை விட்டுப் பிரிந்த பின்னர், சோதோமுக்குப் போய் அங்கே குடியிருந்தான். சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளுமாயிருந்தார்கள் (ஆதி. 13:11-13).

2. ஏலாமின் ராஜா தன் பட்சத்தில் மூன்று ராஜாக்களுடன், சோதோமின் ராஜாவோடு யுத்தம் செய்தான். சோதோமின் ராஜாவுக்கு ஆதரவாக வேறு நான்கு இருந்தனர். அதாவது நான்கு ராஜாக்கள், ஐந்து ராஜாக்களுடன் யுத்தம்பண்ணினர் (ஆதி. 14:8, 9).

3. சோதோமின் ராஜாவும், அவனுக்கு ஆதரவாயிருந்த மற்ற நான்கு ராஜாக்களும் தோற்கடிக்கப்பட்டு ஓடிப்போயினர் (ஆதி. 14:10).

4. சோதோமின் பொருட்கள் கொள்ளையிடப்பட்டன; சோதோமில் வசித்த லோத்து தன் குடும்பத்தோடும், ஜனங்களோடும் சிறைபிடிக்கப்பட்டான். அவன் பொருட்களெல்லாம் எடுத்துக்கொள்ளப்பட்டன (ஆதி. 14:11, 12).

5. ஆபிரகாமுக்கு இச்சம்பவம் அறிவிக்கப்பட்டது (ஆதி. 14:13).

6. ஆபிரகாம் பயிற்சி பெற்றவர்களாயிருந்த தன்னுடைய முந்நூற்றுப் பதினெட்டு வேலையாட்களுக்கும் ஆயுதம் தரிப்பித்து, சிறைப்படுத்தியவர்களைப் பின்தொடர்ந்து, அவர்களை முறியடித்து, லோத்தையும் அவன் குடும்பத்தையும் சகல ஜனங்களையும் விடுவித்து, சகல பொருட்களையும் திரும்பக் கொண்டு வந்தான் (ஆதி. 14:14-16).

7. ஆபிரகாமும் லோத்தும் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்த பின்புங்கூட ஆபிரகாமுக்கு லோத்தின் மீதிருந்த அன்பு மாறாமலிருந்ததை இந்த சம்பவம் வெளிப்படுத்துகிறது.

**போதனை:**

தேவனுடைய பிள்ளைகள் கஷ்டத்திலிருக்கும்போது நாம் அவர்களுக்கு நம்மால் இயன்ற எல்லா உதவிகளையும் செய்ய வேண்டும்.

**மனப்பாடம்:** I யோவான் 4:8

**அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்.**

--------------------

## பாடம் 11

## யோவான்ஸ்நானனின் பிறப்பு

**லூக்கா 1:5-25, 57-66**

**பொருளடக்கம்:**

1. சகரியா என்னும் ஆசாரியனுக்கும், அவன் மனைவியாகிய எலிசபெத்துக்கும் பிள்ளை இல்லாமலிருந்தது (லூக்கா 1:5, 7).

2. இருவரும் வயது சென்றவர்களாயும், தெய்வ பக்தியுள்ளவர்களாயும், தேவனுக்கு நீதியுள்ளவர்களாயும், குற்றமற்றவர்களாயும் இருந்தனர் (லூக்கா 1:6, 7).

3. காபிரியேல் என்னும் கர்த்தருடைய தூதன் அவனுக்குத் தரிசனமாகி, 'உன் வேண்டுதல் கேட்கப்பட்டது; உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு யோவான் என்று பேரிடுவாயாக' என்று சொன்னான் (லூக்கா 1:13, 19).

4. சகரியா, தேவனுடைய வார்த்தையை நம்பவில்லை, அவன். 'நான் கிழவனாயிருக்கிறேன், என் மனைவியும் வயதுசென்றவளாயிருக்கிறாளே' என்று கூறினான். அன்று முதல் அவன் ஊமையானான் (லூக்கா 1:18, 20).

5. தூதன் முன்னறிவித்தபடி, எலிசபெத்துக்கு ஒரு பிள்ளை பிறந்தது. சகரியா ஊமையாயிருந்தபடியால், அந்தப் பிள்ளைக்கு யோவான் என்று பெயரிட வேண்டும் என ஒரு எழுத்துப்பலகையில் எழுதிக் காண்பித்தான் (லூக்கா 1:57, 63).

6. உடனே அவன் வாய் திறக்கப்பட்டது; அவனுடைய வாஞ்சையின்படி தேவன் அவனுக்கு ஒரு மகனைக் கொடுத்தபடியால் அவன் தேவனை ஸ்தோத்திரித்துப் பேச ஆரம்பித்தான் (லூக்கா 1:64).

**போதனை:**

நாம் தேவனுடைய வார்த்தையை சந்தேகிக்கக் கூடாது.

**மனப்பாடம்:** லூக்கா 1:37

**தேவனாலே கூடாதகாரியம் ஒன்றுமில்லை.**

---------------------

## பாடம் 12

## இயேசுவின் பிறப்பு

**லூக்கா 2:1-20**

**பொருளடக்கம்:**

1. யோசேப்பும் மரியாளும் குடிமதிப்பெழுதப்படும்படிக்கு நாசரேத் என்னும் ஊரிலிருந்து பெத்லகேம் ஊருக்குப் போனார்கள் (லூக்கா 2:4, 5).

2. மரியாள் அங்கு தன் முதற்பேறான குமாரனைப் பெற்று சத்திரத்தில் இடமில்லாதபடியினாலே பிள்ளையைத் துணிகளிலே சுற்றி முன்னணையிலே கிடத்தினாள் (லூக்கா 2:7).

3. மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கி, இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக்கொண்டிருந்தார்கள் (லூக்கா 2:8).

4. அவ்வேளையில் தேவதூதன் அவர்களிடத்தில் வந்து இயேசுவின் பிறப்பைப் பற்றிய நற்செய்தியை அறிவித்தான் (லூக்கா 2:9-12).

5. தேவதூதர்கள் தேவனைத் துதித்தனர் (லூக்கா 2:13, 14).

6. மேய்ப்பர்கள் போய் பிள்ளையைக் கண்டு தாங்கள் கேட்டு, கண்ட எல்லாவற்றிற்காகவும் தேவனை மகிமைப்படுத்தி துதித்துக்கொண்டு திரும்பிப் போனார்கள் (லூக்கா 2:20).

**போதனை:**

மேய்ப்பர்களைப்போல, நாமும் இயேசுவைப் பார்க்கிறதற்கும், அவரைப் பற்றிப் பேசுவதற்கும் ஆசையுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

**மனப்பாடம்:** I தீமோத்தேயு 1:15

**பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்.**

----------------

## பாடம் 13

## பாலகனாகிய இயேசு தேவாலயத்திற்குக் கொண்டுபோகப்பட்டது

**லூக்கா 2:21-39**

**பொருளடக்கம்:**

1. பாலகனாகிய இயேசுவைக் கர்த்தருக்கென்று ஒப்புக் கொடுக்கவும், கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிற பலியைச் செலுத்தவும் யோசேப்பும் மரியாளும் அவரை எருசலேமுக்குக் கொண்டு போனார்கள் (லூக்கா 2:21-24).

2. எருசலேமில் சிமியோன் என்னும் பெயர்கொண்ட ஒரு மனுஷன் இருந்தான். அவன் நீதியும் தேவபக்தியும் உள்ளவனாயிருந்தான். அவன்மேல் பரிசுத்தாவியானவர் இருந்தார் (லூக்கா 2:25).

3. கர்த்தருடைய கிறிஸ்துவை அவன் காணுமுன்னே மரணமடைய மாட்டான் என்று பரிசுத்தாவியினாலே அவனுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது (லூக்கா 2:26).

4. மரியாளும் யோசேப்பும் இயேசுவைத் தேவாலயத்திற்குள்ளே கொண்டுவந்தபோது, சிமியோன் அவரைக் கைகளில் ஏந்தி தேவனை ஸ்தோத்திரித்துப் பேசிய வார்த்தைகள் (லூக்கா 2:28-32).

5. அவன் பேசின காரியங்களைக் குறித்து யோசேப்பும் மரியாளும் ஆச்சரியப்பட்டனர் (லூக்கா 2:33).

6. அங்கே அன்னாள் என்னும் ஒரு தீர்க்கதரிசியும் இருந்தாள் (லூக்கா 2:36).

7. அவளும் அந்நேரத்தில் வந்து கர்த்தரைப் புகழ்ந்து அவரைக் குறித்து அங்கு இருந்தவர்களிடம் பேசினாள் (லூக்கா 2:38).

8. கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தின்படி சகலத்தையும் அவர்கள் செய்து முடித்த பின்பு தங்கள் ஊருக்குத் திரும்பிப் போனார்கள் (லூக்கா 2:39).

**போதனை:**

கர்த்தருடைய கட்டளைகளை நாம் கைக்கொள்ளும் போது, அவர் நம்மையும் நம்முடையவைகளையும் ஆசீர்வதிக்கிறார்.

**மனப்பாடம்:** லூக்கா 2:32

**உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது.**

---------------------

## பாடம் 14

## சாஸ்திரிகள் இயேசுவைத் தரிசித்தது

மத்தேயு 2:1-12

**பொருளடக்கம்:**

1. பெத்லகேமிலே இயேசு பிறந்தபொழுது கிழக்கிலே ஒரு புதிய நட்சத்திரம் தோன்றினது (மத். 2:1, 2).

2. சாஸ்திரிகள் அதைக் கண்டு எருசலேமுக்குப் போய், 'யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே?' என்று கேட்டனர் (மத். 2:2).

3. ஏரோது ராஜா அதைக் கேட்டபொழுது அவனும் அவனோடே கூட எருசலேம் நகரத்தார் யாவரும் கலங்கினார்கள் (மத். 2:3).

4. ஏரோது, பிரதான ஆசாரியர், வேதபாரகர் மூலமாக யூதருக்கு ராஜா பெத்லகேமிலே பிறப்பாரென்று அறிந்து கொண்டான் (மத். 2:4, 5).

5. ஏரோது சாஸ்திரிகளிடம் அவர்கள் இயேசுவைக் கண்டபின் தானும் சென்று அவரைப் பணிந்துகொள்வதற்குத் தனக்கு வந்து அறிவிக்கும்படி சொல்லி, அவர்களை அனுப்பினான் (மத். 2:8).

6. சாஸ்திரிகள் நட்சத்திரத்தின் நடத்துதலால் பிள்ளை இருக்குமிடத்திற்குச் சென்று, பிள்ளையையும், அதின் தாயையும் கண்டு, பிள்ளையைப் பணிந்துகொண்டு, பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் காணிக்கைகளாகச் செலுத்தினார்கள் (மத். 2:9-11).

7. ஏரோதிடம் திரும்பிச் செல்ல வேண்டாமென்று சொப்பனத்தில் தேவனால் எச்சரிக்கப்பட்டு சாஸ்திரிகள் வேறு வழியாகத் தங்கள் தேசத்திற்குத் திரும்பிப் போனார்கள் (மத். 2:12).

**போதனை:**

இயேசு யூதருக்கு மாத்திரமல்ல, புறஜாதியாருக்கும் இரட்சகராக வெளிப்பட்டார்.

**மனப்பாடம்:** ஏசாயா 9:2

**இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்.**

-------------------

## பாடம் 15

## பாலகனாகிய இயேசு எகிப்துக்குக் கொண்டு போகப்பட்டது

### மத்தேயு 2:13-23

**பொருளடக்கம்:**

1. கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் யோசேப்புக்குக் காணப்பட்டு. "ஏரோது பிள்ளையைக் கொலைசெய்யத் தேடுவான். ஆதலால் நீ எழுந்து, பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக் கொண்டு எகிப்துக்கு ஓடிப்போய், நான் உனக்குச் சொல்லும் வரைக்கும் அங்கே இரு" என்று சொன்னான் (மத். 2:13).

2. யோசேப்பு இரவிலே எழுந்து பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்குப் புறப்பட்டுப் போய் ஏரோதின் மரணபரியந்தம் அங்கே இருந்தான் (மத். 2:14, 15).

3. ஏரோது தான் சாஸ்திரிகளால் வஞ்சிக்கப்பட்டதை அறிந்து மிகுந்த கோபமடைந்தான். அவன் தான் சாஸ்திரிகளிடம் திட்டமாய் விசாரித்த காலத்தின்படியே பெத்லகேமிலும் அதின் சகல எல்லைகளிலும் இருந்த இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண்பிள்ளைகளையும் கொலை செய்தான் (மத். 2:16).

4. ஏரோதின் மரணத்திற்குப் பின்பு கர்த்தருடைய தூதன் யோசேப்புக்குச் சொப்பனத்தில் காணப்பட்டு, பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு இஸ்ரவேல் தேசத்திற்குப் போகும்படி சொன்னான். யோசேப்பு அப்படியே செய்தான் (மத். 2:19-21).

5. ஏரோதின் மகனான அர்கெலாயு தன் தகப்பனின் பட்டத்திற்கு வந்து அரசாளுகிறான் என்று கேள்விப்பட்டு யோசேப்பு அங்கே போகப் பயந்தான் (மத். 2:22).

6. அவன் மறுபடியும் சொப்பனத்தில் தேவனால் எச்சரிக்கப்பட்டு, நாசரேத் என்னும் ஊரில் சென்று வசித்தான். ஆகவே இயேசு நசரேயன் என அழைக்கப்பட்டார் (மத். 2:22, 23).

**போதனை:**

தேவனுக்குப் பயப்படுகிற சிறு பிள்ளைகளாகிய நம்மை சகலவித ஆபத்துகளிலிருந்தும் பாதுகாப்பதற்காக தேவன் தம்முடைய தூதர்களை வைத்திருக்கிறார்.

**மனப்பாடம்:** சங்கீதம் 91:10

**ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது.**

-------------------

## பாடம் 16

## எருசலேமில் இளைஞரான இயேசு

**லூக்கா 2:41-52**

**பொருளடக்கம்:**

1. இயேசுவானவர் தம்முடைய பன்னிரண்டாவது வயதில் தம் பெற்றோரோடு பஸ்கா பண்டிகையை ஆசாரிக்க எருசலேமுக்குப் போனார் (லூக்கா 2:41, 42).

2. பண்டிகை முடிந்து பெற்றோர் திரும்பி வருகிறபோது இயேசு எருசலேமிலே இருந்து விட்டார் (லூக்கா 2:43).

3. இது யோசேப்புக்கும் மரியாளுக்கும் தெரியாதிருந்தது. அவர்கள் ஒருநாள் பிரயாணம் வந்து, உறவினர்களிடத்திலும் அறிமுகமானவர்களிடத்திலும் அவரைத் தேடினார்கள். காணாததினால் மறுபடியும் அவர்கள் எருசலேமுக்குத் திரும்பி வந்தார்கள் (லூக்கா 2:44, 45).

4. மூன்று நாளைக்குப் பின்பு அவர் தேவாலயத்தில் போதகர் நடுவிலுட்கார்ந்திருக்கவும், அவர்கள் பேசுகிறதைக் கேட்கவும் வினாவவும் கண்டார்கள் (லூக்கா 2:46).

5. அவர் பேசுகிறதைக் கேட்ட யாவரும் அவருடைய புத்தியையும் அவர் சொன்ன மாறுத்தரங்களையும் குறித்துப் பிரமித்தார்கள் (லூக்கா 2:47).

6. அவருடைய தாயார் அவரை நோக்கி, ‘மகனே! ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்? இதோ, உன் தகப்பனும் நானும் விசாரத்தோடே உன்னைத் தேடினோமே’ என்று கேட்டாள் (லூக்கா 2:48).

7. அதற்கு இயேசு, “நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா” என்று கேட்டார் (லூக்கா 2:49).

8. பின்பு அவர் அவர்களுடனேகூட நாசரேத்தூருக்குச் சென்று அங்கு அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார் (லூக்கா 2:51).

**போதனை:**

வேதவசனங்களை நாம் கருத்தாய்ப் படிப்போமானால், சிறு பிள்ளைகளாயிருந்தாலும் எவ்விடத்திலும் நமக்குக் கனம் உண்டு.

**மனப்பாடம்:** லூக்கா 2:52

**இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்.**

--------------------

## பாடம் 17

## இயேசு ஞானஸ்நானம் எடுத்தது

(யோவான்ஸ்நானனின் ஊழியம்)

**மாற்கு 1:2-6; மத். 3:13-17**

**பொருளடக்கம்:**

1. யோவான்ஸ்நானன் இயேசுவுக்கு வழியை ஆயத்தம் பண்ணும்படி அனுப்பப்பட்ட தூதனாயிருந்தான். அவன் ஒட்டகமயிர் உடையைத் தரித்து, தன் அரையில் வார்க்கச்சையைக் கட்டிக் கொண்டவனாயும், வெட்டுக்கிளியையும் காட்டுத்தேனையும் புசிக்கிறவனாயும் இருந்தான் (மாற்கு 1:2, 6).

2. அவன் மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக் குறித்து வனாந்தரத்தில் பிரசங்கித்தான். மனந்திரும்பினவர்களுக்கு அவன் யோர்தான் நதியில் ஞானஸ்நானம் கொடுத்தான் (மாற்கு 1:4, 5).

3. யோவான்ஸ்நானனுக்கு முன்பு ஒருவரும் மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானம் கொடுக்கவில்லை. அவன் ஞானஸ்நானம் கொடுக்கும்படி அனுப்பப்பட்டதால் இப்பெயரால் அழைக்கப்பட்டான்.

4. இயேசு அவனால் ஞானஸ்நானம் பெறுவதற்கு அவனிடம் வந்தார் (மத். 3:13).

5. அவன் அவருக்குத் தடைசெய்து, 'நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா' என்றான் (மத். 3:14).

6. இயேசு, 'இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது' என்றார். அப்பொழுது அவன் இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான் (மத். 3:15).

7. இயேசு ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது. தேவ ஆவி புறாவைப்போல இறங்கி அவர்மேல் வந்தார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம்

உண்டாகி, ‘இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்‘ என்றுரைத்தது (மத். 3:16, 17).

**போதனை:**

நாம் தாழ்மையுடன் தேவநீதியை நிறைவேற்றினால் தேவன் நம்மில் பிரியப்படுவார்.

**மனப்பாடம்:** நீதிமொழிகள் 12:28

**நீதியின் பாதையில் ஜீவன் உண்டு.**

----------------

## பாடம் 18

## இயேசு வனாந்தரத்தில் சோதிக்கப்பட்டது

### மத்தேயு 4:1-11

**பொருளடக்கம்:**

1. இயேசு ஞானஸ்நானம் பெற்று பரிசுத்தாவி பெற்றவுடன் பிசாசினாலே சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார் (மத். 4:1).

2. அவர் இரவும் பகலும் நாற்பது நாள் உபவாசமாயிருந்த பின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று (மத். 4:2).

3. அவருக்கு வந்த முதல் சோதனையும் அவர் அதை ஜெயித்ததும் (மத். 4:3, 4).

4. இரண்டாம் சோதனையும் ஜெயமும் (மத். 4:5-7).

5. மூன்றாம் சோதனையும் ஜெயமும் (மத். 4:8-10).

**போதனை:**

இயேசு எப்படிப் பிசாசையும் அவன் கொண்டு வந்த சோதனைகளையும் ஜெயித்தாரோ, அதுபோலவே நாமும் பிசாசை ஜெயிக்க வேண்டும்.

**மனப்பாடம்:** வெளிப்படுத்தல் 12:11

**ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் [சாத்தானை] ஜெயித்தார்கள்.**

--------------------

## பாடம் 19

## கானாவூர் கலியாணம்

யோவான் 2:1-11

**பொருளடக்கம்:**

1. கலிலேயாவிலுள்ள கானாவூரிலே ஒரு கலியாணம் நடந்தது (யோவான் 2:1).

2. இயேசுவின் தாய் அங்கேயிருந்தாள் (யோவான் 2:1).

3. இயேசுவும் அவருடைய சீஷரும் அந்தக் கலியாணத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள் (யோவான் 2:2).

4. திராட்சரசம் குறைவுபட்டபோது இயேசுவின் தாய் அதை இயேசுவிடம் அறிவித்தாள் (யோவான் 2:3).

5. அதற்கு இயேசு, 'என் வேளை இன்னும் வரவில்லை' என்றார் (யோவான் 2:4).

6. இயேசுவின் தாய் வேலைக்காரரிடம், 'அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள்' என்றாள் (யோவான் 2:5).

7. இயேசு வேலைக்காரரிடம் அங்கிருந்த ஆறு கற்சாடிகளில் தண்ணீர் நிரப்பும்படி கூறினார். அவர்கள் அப்படியே செய்தார்கள் (யோவான் 2:6, 7).

8. அதை மொண்டு பந்தி விசாரிப்புக்காரனிடத்தில் கொடுக்கும்படி இயேசு கூறினார் (யோவான் 2:8).

9. பந்தி விசாரிப்புக்காரன் மணவாளனை அழைத்து, "எந்த மனுஷனும் முன்பு நல்ல திராட்சரசத்தைக் கொடுத்து ஜனங்கள் திருப்பதியடைந்த பின்பு ருசி குறைந்ததைக் கொடுப்பான், நீரோ நல்ல ரசத்தை இதுவரைக்கும் வைத்திருந்தீரே" என்றான் (யோவான் 2:9, 10).

10. இதிலிருந்து இயேசு தண்ணீரை நல்ல திராட்சரசமாக மாற்றினாரென்று நாம் விளங்கிக் கொள்கிறோம். இதுவே இயேசு செய்த முதலாம் அற்புதமாயிருக்கிறது (யோவான் 2:11).

**போதனை:**

நாம் இயேசுவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்போது, அவர் நம்மை ஆசீர்வதிக்கிறார்.

**மனப்பாடம்:** சங்கீதம் 84:11

**உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்.**

----------------

## பாடம் 20

## இயேசு தேவாலயத்தைச் சுத்திகரித்தது

யோவான் 2:13-17

**பொருளடக்கம்:**

1. இயேசு எருசலேமுக்குப் போனார் (யோவான் 2:13).

2. இயேசு கண்ட அந்த ஆலயத்தின் நிலவரம் (யோவான் 2:14).

3. இயேசு செய்த கிரியைகள் (யோவான் 2:15).

4. புறா விற்கிறவர்களை இயேசு கடிந்து கொண்டார் (யோவான் 2:16).

5. அவருடைய பக்தி வைராக்கியத்தைக் குறித்துச் சொல்லப்பட்டிருப்பதை சீஷர்கள் நினைவுகூர்ந்தனர் (யோவான் 2:17).

**போதனை:**

இயேசு நமக்குள் வாசம்பண்ணும்படியாக நம் இருதயங்கள் எப்போதும் சுத்தமாகக் காணப்பட வேண்டும்.

**மனப்பாடம்:** மத்தேயு 5:8

**இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.**

------------------